## முதல்வர் மு.க.ஸ்டாலினின் எண்ணற்ற புதுமை திட்டங்களால்

# விக்கிரவாண்டி தொகுதியில் தி.மு.க. வரலாற்றுச் சாதனை வெற்றி!

## மக்களின் பேராதரவைப் பெற்றுள்ளார் முதல்வர்!

சென்னை, ஜூலை 14 -

**தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் செயல்படுத்தி வரும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம், விடியல் பயணம் திட்டம், புதுமைப்பெண் திட்டம், நான் முதல்வன் திட்டம், விவசாயிகளுக்கு இலவச மின் இணைப்புத் திட்டம் முதலான எண்ணற்ற புதுமையான திட்டங்களால் விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் வரலாற்றுச் சாதனை வெற்றி !**

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் தளபதி திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சராக பொறுப்பேற்றது முதல் எண்ணற்ற மக்கள் நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகி றார்கள்

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை, விடியல் பயணம் திட்டம், புதுமைப்பெண் திட்டம், ஏழைப் பெண்களுக்கு திருமண நிதி உதவி, விவசாயிகளுக்கு இலவச மின் இணைப்புத் திட்டம், அயோத்திதாச குடியிருப்பு மேம்பாட்டுத் திட்டம், அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம், முதலான திட்டங்கள் அனைத்துத் தரப்பு மக்களும் பயனடைந்து வருகிறார்கள்.

குறிப்பாக, தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் கொண்டு வந்துள்ள மக்கள் நல திட்டங்களால் ஒவ்வொரு குடும்பத்திலும் உள்ள தாய்மார்கள், கல்லூரி செல்லும் மாணவர்கள், மாணவர்கள், விவசாயிகள், தொழிலாளர்கள், மீனவர்கள் உள்ளிட்ட அனைவரும் பயனடைந்து வருகிறார்கள். இத்திட்டங்கள் பொதுமக்களிடம் மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளது. மேலும், அண்டை மாநிலங்கள் மற்றும் வெளிநாட்டிலும் திராவிட மாடல் அரசின் திட்டங்களை வரவேற்று அங்கும் செயல் படுத்தி வருகிறார்கள்.

மேலும், விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி தொகுதயில் **முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின்கீழ்**, விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதியில் 149 பள்ளிகளில் 1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் 10,651 மாணவ, மாணவியர் பயன்.

**முதல்வரின் முகவரி திட்டத்தின்கீழ்** 21 ஆயிரத்து 93 கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டு தீர்வு காணப்பட்டு பொதுமக்கள் பயனடைந்துள்ளனர்.

**இல்லம் தேடிக் கல்வி திட்டத்தின்கீழ்** ஓராயிரத்து 328 மாணவ, மாணவியர் சேர்க்கப்பட்டு 83 பெண் தன்னார்வலர்கள் மூலம் பயனடைகின்றனர்.

**கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டத்தின்கீழ்**, 53 ஆயிரத்து 375 குடும்பத் தலைவிகள் மாதந்தோறும் ரூ.1,000 பெறுகின்றனர்.

**மகளிருக்கு கட்டணமில்லா பேருந்துப் பயணத்திட்டத்தின்கீழ்** 3 கோடியே 41 இலட்சத்து 99 ஆயிரத்து 712 முறை மகளிர்,

ஒரு இலட்சத்து 2 ஆயிரத்து 672 திருநங்கைகள், 4 இலட்சத்து 90 ஆயிரத்து 176 மாற்றுத்திறனாளிகள், ஒரு இலட்சத்து 7 ஆயிரத்து 88 துணையாளர்கள் அரசுப் பேருந்துகளில் கட்டணமில்லாமல் பயணம் செய்து பயனடைந்துள்ளனர்.

**நகைக்கடன் தள்ளுபடித் திட்டத்தி ன்கீழ்**, ஓராயிரத்து 633 பயனாளிகளுக்கு ரூ.8.50 கோடி நகைக்கடன் தள்ளுபடி.

**இன்னுயிர் காப்போம் நம்மைக் காக்கும் 48 திட்டத்தின்கீழ்** 11 இலட்சத்து 55 ஆயிரத்து 400 ரூபாய் செலவில் கட்டணமின்றி விழுப்புரம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் 190 பேர் சிகிச்சை பெற்று பயனடைந்துளனர்.

**விவசாயிகளுக்கு புதிய விவசாய மின் இணைப்புகள் வழங்கும் திட்டத்தின்கீழ்** விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதியில் 16 கோடியே 76 இலட்சம் ரூபாய் செலவில் 901 பம்ப்செட்களுக்கு இலவச மின் இணைப்புகள் வழங்கப்பட்டு விவசாயிகள் பயடைந்துள்ளனர்.

**கலைஞரின் வரும்முன் காப்போம் திட்டத்தின்கீழ்** 6 மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு, பல்வேறு நோய்களுக்கான சிகிச்சைகள் அளிக்கப்பட்டு, 4,621 பேர் பயனடைந்துள்ளனர்.

முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் செயல்படுத்தியுள்ள மக்கள் நலத் திட்டங்களால், நடைபெற்று முடிந்த விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் அதிமுக போட்டியிட முடியாமல் அஞ்சி ஓலிந்தனர், பா.ம.க மக்களை பிளவுபடுத்தி வாக்குகளை பெற முயன்றது ‘

திராவிட முன்னேற்றக் கழகம் செயல்படுத்தியுள்ள சிறப்பான எண்ணற்ற திட்டங்களை முன்னிறுத்தி, மக்களிடம் திட்டங்களையும் பயன்களையும் எடுத்துக் கூறி, மக்களின் பேராதவை பெற்று இது வரை இல்லாத அளவு திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர் திரு.அன்னியுர் சிவா பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் அனைத்து மக்களின் வாக்குகளை பெற்று மகத்தான வெற்றி வரலாற்றுச் சாதனை படைத்துள்ளது.



தலைமைச் செயலகத்தில், நேற்று (13.07.2024) தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, தலைமையில், சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் பருவ மழை முன்னெச்சரிக்கை உள்ளிட்ட பேரிடர் மேலாண்மை நடவடிக்கைகள் குறித்து அரசு உயர் அலுவலர்களுடன் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

## விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் மகத்தான வெற்றியை

# தி.மு.க. கூட்டணிக்கு அளித்த வாக்காளர்களுக்கு நன்றி!

## மனிதநேய மக்கள் கட்சியின் மாநிலத் தலைவர் பேராசிரியர் எம்.எச்.ஜவாஹிருல்லா அறிக்கை:

சென்னை, ஜூலை 14 -

மனியதநேய மக்கள் கட்சித் தலைவர் பேராசிரியர் எம்.எச்.ஜவாஹிருல்லா அறிக்கை வருமாறு:-



விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் திமுக கூட்டணியின் வெற்றி வேட்பாளர் அன்னியூர் சிவா அவர்களுக்கு மகத்தான வெற்றியை வழங்கிய அத்தொகுதி மக்களுக்கு நெஞ்சம் நிறைந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த வெற்றி மூன்றரை ஆண்டுக் காலதிராவிட முன்னேற்றக் கழகத்தின் நல்லாட்சிக்கு மக்கள் வழங்கி இருக்கும் அங்கீகாரம் ஆகும்.

இந்த இடைத்தேர்தலில் பல்வேறு சூழ்ச்சிகளை எதிர்க்கட்சியினர் மேற்கொண்டனர். தவறான பரப்புரைகளையும் அவதூறுகளையும் பேசி வந்தனர். அவற்றையெல்லாம் மக்கள் புறந்தள்ளி வரலாற்று வெற்றியை இந்தியா கூட்டணிக்கு வழங்கி இருக்கின்றனர்.

தமிழ்நாடு மட்டுமல்லாமல் இந்தியா முழுமையும் நடைபெற்ற இடைத்தேர்தலில் 10 இடங்களை இந்தியா கூட்டணி கைப்பற்றி இருப்பது ஒன்றிய அரசின் மீது மக்களுக்குஇருக்கும் அதிருப்தியைப் பறைசாற்றுகிறது. மீண்டும் மீண்டும் இந்தியா கூட்டணிவலுவடைந்து வருவது நாட்டிற்கும் மக்களுக்கும் நன்மை பயக்கும் விடயமாகும்.

விக்கிரவாண்டி வெற்றியைச் சாத்தியமாக்கி இருக்கும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும் களப் பணி ஆற்றிய இந்தியா கூட்டணியின் அத்துணை தோழமைக்கட்சியினருக்கும் என் டி ஏ கூட்டணியின் பொய் பரப்புரையைப் புறந்தள்ளி அமோக வெற்றியைப் பதிவு செய்த விக்கிரவாண்டி தொகுதியின் வாக்காளர்களுக்கும் மனித நேயமக்கள் கட்சியின் சார்பில் மனமார்ந்த வாழ்த்துக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு எம்.எம். ஜவாஹிருல்லா விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டு ள்ளார்.

## 3 ஆண்டு கால முதலமைச்சரின் ஆட்சியை எடைப்போட்டு

# விக்கிரவாண்டி இடைத் தேர்தலில் மகத்தான வெற்றியினை மக்கள் அளித்துள்ளனர்!

## விவசாயிகள் - தொழிலாளர்கள் கட்சித் தலைவர் பொன்குமார் அறிக்கை!

சென்னை, ஜூலை 14-



விக்கிரவாண்டி சட்டப்பேரவை இடைத் தேர்தலில் திராவிட முன்னேற்ற கழகம் பெற்றுள்ள மகத்தான வெற்றி என்பது கடந்த மூன்று ஆண்டு கால முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் ஆட்சிக்கு கிடைத்த நற்சான்றாகும். மக்கள் இந்த அரசை எடை போட்டு பார்த்து இந்த இடைத்தேர்தலில் வாக்களித்துள்ளனர். இந்த மகத்தான வெற்றிக்கு காரணமான தமிழ்நாடு முதலமைச்சரை விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சியின் சார்பில் வாழ்த்துகிறேன், பாராட்டுகிறேன் என பொன்குமார் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு: -

விக்கிரவாண்டி சட்டப் பேரவை இடைத்தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழக அணி சார்பில் அன்னியூர் சிவா அவர்கள் வேட்பாளராக நிறுத்தப்பட்டார்கள். பாட்டாளி மக்கள் கட்சி, பாரதிய ஜனதா கட்சி கூட்டணியோடு தன் வேட்பாளரை விக்கிரவாண்டி தொகுதியில் களம் இறக்கியது. அனைத்து தேர்தல்களிலும் பிரச்சாரம் மேற்கொண்ட திராவிட முன்னேற்ற கழக தலைவரும், முதலமைச்சருமான தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் விக்கிரவாண்டி சட்டப்பேரவை இடைத் தேர்தலில் பிரச்சாரம் மேற்கொள்ளாத நிலையிலும் அந்த தொகுதி வாக்காளர்கள் மகத்தான வெற்றியினை திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு அளித்துள்ளனர்.

இது கடந்த மூன்று ஆண்டு கால முதலமை ச்சரின் திராவிட மாடல் ஆட்சியில் தமிழ்நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட பல்வேறு நலத்திட்டங்களை, நாட்டின் வளர்ச்சியை, பொருளாதார மேம்பாட்டை, தொழில் வளத்தை கணக்கிட்டு, எடை போட்டு பார்த்து மக்கள் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்களித்துள்ளனர்.

வன்னியர்கள் பெருவாரியான தொகுதியான இந்த விக்கிரவாண்டி இடைத் தேர்தலில் பாட்டாளி மக்கள் கட்சி தோல்வியை சந்தித்துள்ளது. இதற்கு காரணம் தமிழ்நாட்டுக்கு விரோதமான, மத நல்லிணக்கத்திற்கு விரோதமான, இட ஒதுக்கீடு உள்ளிட்ட சமூக நீதிக்கு விரோதமான பாரதிய ஜனதா கட்சியோடு பாட்டாளி மக்கள் கட்சி கூட்டணி அமைத்ததால் இந்த படுதோல்வியை விக்கிரவாண்டி தொகுதி வாக்காளர்கள் பாட்டாளி மக்கள் கட்சிக்கு வழங்கி உள்ளனர்.

பாரதிய ஜனதா கட்சி எந்த ரூபத்தில், எந்த முகமூடியை அணிந்து வந்தாலும் தமிழ்நாட்டில் அந்த கட்சிக்கு இடம் இல்லை என்பதை கடந்த நாடாளுமன்றத் தேர்தலும், இந்த சட்டப்பேரவைத் இடைத் தேர்தலும் மிகத் தெளிவாக அறிவித்து விட்டது.

இவ்வளவு பாடங்களை கற்ற பின்னரும் பாரதிய ஜனதா கட்சி அரசு தமிழ்நாட்டிற்கு துரோகம் செய்வதை விடுத்து தமிழ்நாட்டிற்கு ஒதுக்கீடு செய்ய வேண்டிய நிதியை, குறிப்பாக வளர்ச்சி திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடை முறையாக செய்து அனைத்து மாநிலங்களையும் பாரபட்சம் இன்றி ஒன்றிய அரசு நடந்து கொள்ள வேண்டும் என்பதை மக்கள் தெளிவுபடுத்தி உள்ளனர். மோடி அரசு இதற்கு பிறகாவது தன்னை திருத்திக் கொள்ளும் என நம்புவோமாக.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ. - கே.ஏழுமலை எம்.சி. முன்னிலையில்

# சென்னை தென்மேற்கு மாவட்டத்தில் தமிழச்சி தங்கபாண்டியன் நன்றி கூறுகிறார்!

## மயிலை த.வேலு எம்.எல்.ஏ. அறிவிப்பு!

சென்னை, ஜூலை 14-

இந்தியா கூட்டணி சார்பில் போட்டியிட்டு வெற்றிப்பெற்ற கழகவேட்பாளர் தமிழச்சி தங்க பாண்டியன் சென்னை தென்மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட தியாகராயர் நகர் கிழக்கு, மேற்கு தொகுதியில் வட்டம் வாரியாக இன்று (14.07.2024 - ஞாயிற்றுகிழமை) வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்கும் நிகழ்ச்சி கீழ்க்காணும் விவரப்படி நடைபெற உள்ளது.



வட்டம், பகுதி, துவங்கும் இடம், முடியும் இடம் வருமாறு:

துவங்கும் நேரம் காலை 7 மணிமுதல்

135அ - கிழக்குபகுதி - வேளாங்கண்ணிபள்ளி, காமராஜர் சாலை - ஆர்8 வடபழனி காவல் நிலையம் அருகில் வடபழனி

130அ - மேற்குபகுதி - பிள்ளையார் கோவில் தெரு, (ஆர்8 வடபழனிகாவல் நிலையம் அருகில் வடபழனி) - திருநகர் 7வது தெரு வடபழனி

130 வது - மேற்குபகுதி - அம்மன் கோவில் தெரு வடபழனி - ஆற்காட்ரோடு, வடபழனி

131அ - கிழக்குபகுதி - அறிஞர் அண்ணா பொதுநல மன்றம் - அசோக்நகர் 10வது மற்றும் 11வது தெரு (ஆர்3 காவல்நிலையம் அருகில்)

135வது கிழக்குபகுதி - (ஆர்3 காவல்நிலையம் அருகில்), அசோக் நகர் - அசோக் நகர் 7வது அவென்யூ

131வது - கிழக்குபகுதி - கலைஞர் பொதுநலமன்றம், அசோக் நகர் 10வது அவென்யூ -வாத்தியார் தோட்டம், கோடம்பாக்கம்

132வது மேற்கு பகுதி - காமராஜர் காலனி 9வது தெரு மாதாகோவில் - கோடம்பாக்கம் மேம்பாலம் அருகில்

132அ - மேற்குபகுதி - கோடம்பாக்கம் மேம்பாலம் அருகில் - சேர்க்கான் தோட்டம், கோடம்பாக்கம்

பிற்பகல் 3 மணிமுதல்

141அ - கிழக்குபகுதி - செங்கேனியம்மன் கோவில், சி.ஐ.டி, நகர் - தென்மேற்கு போக் சாலை

141வது - கிழக்குபகுதி - லலிதாபுரம், தென்மேற்கு போக் சாலை - முத்துரங்கன் சாலை

134அ - கிழக்குபகுதி - மேட்லிசப்வே ஆஞ்சநேயர் கோவில் ஸ்டேமூன் ரோடு -

134வது - கிழக்குபகுதி - அஞ்சநேயர் கோவில் ஸ்டேஷன் ரோடு - உமாபதிதெரு.

இக்கூட்டத்தில், மாவட்டத்திற்குட்பட்ட மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், செயற்குழுபொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி நிர்வாகிகள் வட்டச் செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், மாமன்ற உறுப்பினர்கள், அனைத்து அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் கழக உடன்பிறப்புகள் அனைவரும்; தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுகொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிவித்துள்ளார்.

## தமிழ்நாட்டில் கனமழைக்கான மஞ்சள் எச்சரிக்கை!

சென்னை, ஜூலை 14-

தமிழ்நாட்டில் நாளை கனமழைக்கான மஞ்சள் எச்சரிக்கை என இந்திய வானிலை மையம் தகவல் தெரிவித்துள்ளது.

7 முதல் 11 செ.மீ. வரை மழை பெய்யும் என்பதால் நாளை மஞ்சள் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு, புதுச்சேரியில் ஓரிரு இடங்களில் 7 நாட்கள் மிதமான மழைக்கு வாய்ப்பு எனவும் இந்திய வானிலை மையம் தகவல் தெரிவித்துள்ளது.



இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் .பி.கே.சேகர்பாபு தலைமையில் நேற்று (13.07.2024) ஆணையர் அலுவலகக் கூட்ட அரங்கில் பழனியில் நடைபெறவுள்ள அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாட்டு முன்னேற்பாடு பணிகள் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலர் டாக்டர் பி.சந்தரமோகன், , இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் க.வீ.முரளீதரன், மாநாட்டின் ஒருங்கிணைப்பு குழு உறுப்பினர்கள் தவத்திரு திருக்கயிலாய பரம்பரை, பேரூர் ஆதினம் முனைவர் சாந்தலிங்க மருதாசல அடிகளார், தவத்திரு சிரவை ஆதினம் குமரகுருபரசுவாமிகள், தவத்திரு மயிலம் பொம்மபுர ஆதீனம் ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள், முதுமுனைவர் மு.பெ.சத்தியவேல் முருகனார், .சுகிசிவம், கூடுதல் ஆணையர்கள் .சங்கர், திருமதி ந. திருமகள், திருமதி சி.ஹரிப்ரியா, தலைமைப் பொறியாளர் பி.பெரியசாமி, இணை ஆணையர்கள் உள்ளிட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



செம்மொழி பூங்காவில் இருந்து தேனாம்பேட்டை தமிழ்நாடு சுகாதார மறுசீரமைப்பு திட்ட கூட்டரங்கம் வரை உலக மக்கள் தொகை தினம் 2024 முன்னிட்டு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (13.07.2024) உறுதிமொழி ஏற்று, பேரணியை கொடியசைத்து துவங்கி வைத்தார். இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் ஊரகநலப்பணிகள் இயக்குநர் மரு.இராஜமூர்த்தி, பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்புமருந்துத்துறை மரு.செல்வவிநாயகம், குடும்பநலத்துறை இயக்குநர் மரு.கிருஷ்ணா, உயரலுவர்கள் மற்றும் செவிலிய மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.